**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO-172/2023**
**Dated :29.12.2025**
**Deposition of witness for : P.W.5**

**List of Witness LW3 Examined as PW5(Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடமலை | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் | தாலுகா | : | கந்தர்வக்கோட்டை |
| கிராமம் | : | கல்லுக்காரன்பட்டி | தொழில் | : | கார்பெண்டர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Accused absent. Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)
<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கார்பெண்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சுப்பையா எனது சித்தப்பா ஆவார். அ.சா.1 எனது மாமா ஆவார். அ.சா.2-ஐ எனக்கு தெரியும். கடந்த 10.02.2023 ஆம் தேதி காலை சுமார் 10.00-11.00 மணியளவில், நானும் மொக்கையா என்பவரும் கல்லுக்காரன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது, செந்தில்குமார் என்பவரும் மற்றொரு நபரும் இருசக்கர வாகனத்தில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி, புதுக்கோட்டை - தஞ்சாவூர் சாலையை கடந்த போது, புதுக்கோட்டையில் இருந்து அதிவேகமாக வந்த ஒரு இருசக்கர வாகனம் மேற்படி செந்தில்குமார் சென்ற இருசக்கர வாகனத்தில் மோதியது. அந்த இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் வந்தார்கள். நான்கு நபர்களும் விபத்தால் கீழே விழுந்துவிட்டார்கள். நாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக அந்த 4 நபர்களையும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மோதிய இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்து வந்த நபரின் பெயர் ராஜபாண்டி ஆகும். இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபரின் பெயர் தற்போது ஞாபகம் இல்லை. அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். விபத்தில் அடிபட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சுப்பையா சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். செந்தில்குமார் விபத்தில் காயமுற்று சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1)** அடிபட்ட செந்தில்குமார், சுப்பையா ஆகியோரை நான் கந்தர்வகோட்டை மருத்துவமனையில் சேர்க்கவில்லை என்றால் சரிதான், பின்னால் நாங்கள் அனைவரும் மருத்துவமனை வந்தோம். அடிபட்ட நபர்கள் மருத்துவமனைக்கு சென்ற பிறகு நான் 15 நிமிடங்கள் கழித்து, அங்கு சென்றேனா என்றால் சுமார் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்தில் சென்றேன். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு, மருத்துவமனை சென்ற போது, செந்தில்குமாரும் சுப்பையாயும் அங்கு சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் சரிதான். செந்தில்குமாரும் சுப்பையாவும் எனது உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவத்தின் பிறகு நான் நேரடியாக தற்போது தான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான்.

2) விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனங்களின் பதிவெண் எனக்கு தெரியாது என்றால் சரிதான். செந்தில்குமாரும் சுப்பையாவும் நெல் குடோனிற்கு செல்வதற்காக சாலையை குறுக்காக கடந்த போது தான் சம்பவம் நடைபெற்றது என்பது நான் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் காயமுற்ற நபர்கள் எனது உறவினர்கள் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**ஒப்பம்.நா.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**